//தனி கவனம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண் 4255/ஆ4/2025 நாள் 22.08.2025**

**பொருள் :** தேர்வுகள்– தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு அக்டோபர் 2025 –தொடர்பான சென்னை அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் செய்திக்குறிப்பு –பள்ளிகளுக்கு தெரிவித்தல் – சார்பு

**பார்வை :** சென்னை – 6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.012335/டி(1)/2025 21.08.2025

*********

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதங்களுக்கிணங்க தமிழ் மொழி இலக்கியத் திறனை மாணவர்கள் மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு நடத்தப்படுகிறது .2025–2026 ஆம் ஆண்டிற்கான தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு 11.10.2025 (சனிக்கிழமை) அன்று நடத்தப்படவுள்ளது. இத்தேர்வில் தெரிவு செய்யப்படும் மாணவ, மாணவிகளுக்கு பள்ளிக்கல்வித்துறை வழியாக மாதம் ரூ.1500/– வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும். இத்தேர்வில் 50 விழுக்காடு அரசுப் பள்ளி மாணவர்களும், மீதமுள்ள 50 விழுக்காட்டிற்கு அரசுப் பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பிற பள்ளி மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.

பாடத்திட்டம்: தமிழ்நாடு அரசின் 2025–2026 –ம் கல்வியாண்டில் வெளியிடப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட பத்தாம் வகுப்பு தமிழ் பாட புத்தகத்தில் உள்ள ஏழு(7) இயல்களில் கடந்த ஆண்டில் மாணவர்கள் பயிலாத "இயல் 2–ல் உள்ள மேகம், பிரும்மம்: இயல் 6–ல் முத்தொள்ளாயிரம்: மற்றும் இயல் 7–ல் அக்கறை* ஆகிய 4 தலைப்புகளைத் தவிர ஏனைய பகுதிகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

இத்தேர்வு கொள்குறி (OMR) வகையில் நடத்தப்படும்.

2025 –2026–ம் கல்வியாண்டில் தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் (அரசு/நகரவை /ஆதிதிராவிட நலம்/ நிதியுதவி/ மெட்ரிக்/ CBSE/ICSE உட்பட) பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். 11.10.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ள தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக விண்ணப்ப படிவத்தினை 22.08.2025 முதல் 04.09.2025 வரை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணத்தொகை ரூ.50/– சேர்த்து சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரிடம் /முதல்வரிடம் ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து வகை (அரசு/நகரவை /ஆதிதிராவிட நலம்/ நிதியுதவி/ மெட்ரிக்/ CBSE/ICSE உட்பட) மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வுக்கு விண்ணப்பித்தல் குறித்து உரிய அறிவுரைகள் வழங்கிடவும் தேர்வு தொடர்பான அறிவிப்பினை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அறியும் வண்ணம் அனைத்து பள்ளிகளிலும் அறிவிப்பு பலகையில் ஒட்டவும். அதிக எண்ணிக்கையிலான தேர்வர்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்குமாறும் தலைமை ஆசிரியர்கள்/ முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இணைப்பு:

1. விண்ணப்ப படிவம்

//ஓம்.சு.தயாளன் //

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்.

| தமிழ்நாடு மொழி இலக்கியத் திறனறித் தேர்வு<br>2025-2026 | |
|---|---|
| மாணவர்கள் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்யும் தேதி | 22.08.2025 முதல் 04.09.2025 |
| மாணவர்கள் விண்ணப்பங்களை பள்ளித்தலைமை ஆசிரியரிடம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 04.09.2025 (வியாழக்கிழமை ) |
| தேர்வுக்கட்டணம் | ரூ.50/- |
| தேர்வு நாள் | 11.10.2025<br>(சனிக்கிழமை) |
| பள்ளித்தலைமை ஆசிரியர் / முதல்வர்கள் விண்ணப்பங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் நாள் | 28.08.2025 முதல் 10.09.2025 |

//ஓம்.சு.தயாளன் //
முதன்மைக் கல்வி அலுவலர்,(பொ)
வேலூர்.

பெறுநர்,
அனைத்து வகை (அரசு/நகரவை /ஆதிதிராவிட நலம்/ நிதியுதவி/ மெட்ரிக்/ CBSE/ICSE உட்பட) மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.
நகல் :
வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார்) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர்நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.